
# அறிவு மஞ்சரி

**1450 பல்சுவைத் தகவல்கள்**

**புதுமைச் செய்திகள்**

**ஒரு வரி, இரு வரி மூன்று வரிச் செய்திகள்**





01
IPR


## இ. சிறிஸ்கந்தராசா

# அறிவு மஞ்சரி

1400க்கு மேற்பட்ட
பல்சுவைத் தகவல்கள்
புதுமைச் செய்திகள்
ஒரு வரி,
இரு வரி,
மூன்று வரிச் செய்திகள்

*நகைச்சுவை வேந்து*
இ. சிறிஸ்கந்தராசா

| | | |
|---|---|---|
| நூற்பெயர் | : | அறிவு மஞ்சரி |
| ஆசிரியர் | : | இராமசாமி சிறிஸ்கந்தராசா © |
| முகவரி | : | 93, பீட்டர்ஸன் லேன்,<br>E 15, பீட்டர்ஸன் தொடர்மாடி,<br>வெள்ளவத்தை.<br>தொலைபேசி : 011-5343073 |
| முதற்பதிப்பு | : | 15.10.2005 |
| அச்சகம் | : | ரெக்னோ பிரின்டர்ஸ்,<br>வெள்ளவத்தை.<br>077- 7301920 |
| விலை | : | ரூபா. 130.00 |


# முகவுரை

அறிவு மஞ்சரி நூலை வாசிக்க முன்னர் இந்நூலை ஏன் எழுதினேன் என்ற கேள்விக்கு பதிலை மனம் திறந்து கூற விரும்பு-கிறேன். இன்றைய உலகம், அவசர உலகம், எல்லாத் துறைகளிலும் நிமிடத்திற்கு ஒரு மாற்றம், முன்னேற்றம், இவற்றுக்கு ஏற்றபடி நம் அறிவையும் ஆற்றல் திறமைகளையும் வளர்த்துக் கொள்ள வேண்டிய கட்டாயம் நமக்குள்ளது. பொது அறிவு என்பது பாடசாலை மாணவர்களுக்கு மட்டுமன்றி நம் அனைவருக்கும் தேவையான ஒன்றாகும்.

கற்றது கை மண்ணளவு கல்லாதது உலகளவு என்பார்கள். எமக்குத் தெரிந்த விடயங்களை விட தெரியாத விடயங்களே ஏராளம். அறிவு வளர்ச்சி வானளவுக்கு உயர்கிறது. "நூல்கள் அறிவுச் சுரங்கத்தின் திறவு கோல்கள்; இன்பத்தோட்டின் நுழை-வாயில்கள் முற்போக்கு உயர்வுக்கு வழிகாட்டி" என்றார் ஓர் அறிஞர்.

அறிவு வளர்ச்சிக்கு துணை புரிவது பல்வேறு பயனுள்ள தகவல்கள் செய்திகள்,விடயங்கள் ,பொது அறிவு, பயனுள்ள பல்துறை தகவல்களை படிக்கப் படிக்க அறிவு விரிவடைகிறது.

நான் பல ஆண்டுகளாக சேகரித்து வந்த பயனுள்ள செய்தி-களையும் தகவல்களையும் உலகின் புதுமைச் செய்திகளையும் அத்துடன் பல நூல்கள் மூலம் கிடைத்த பல் துறையை சார்ந்த தகவல்களையும் சேர்த்து ஒரு, இரு, மூன்று வரிச் செய்திகளாகவும், வினா விடையாகவும் இந்நூலைத் தொகுத்திருக்கிறேன்.

அத்துடன் பல உபதலைப்புகளின் கீழ் அரசியல், விளையாட்டு, சங்கீதம் சமயம், சினிமா, இலக்கியம், என 1400க்கு மேற்பட்ட செய்தி-களையும் தொகுத்துள்ளேன். தேனீயைப் போலத் தேடி தேடி பல

சஞ்சிகைகள், நூல்களைப் படித்து அறிந்து நூலை தொகுத்தது மட்டுமல்ல சிறிய சிறிய செய்திகள் ஆனால் பயன் தருவதில் பெரியன, அறிவதற்கு உரியன. தேடுதற்கு அரியன. இந்நூல் உங்கள் பொது அறிவை விருத்தி செய்ய நல் விருந்தாக அமையும் என நினைக்கிறேன்.

எனது 5வது வெளியீடான பல்சுவைக் கதம்பம், 10வது வெளியீடான பல்சுவைச் சுரங்கம் நூல்களுக்கு வாசகர்களான நீங்கள் அளித்த அமோக வரவேற்பு எனக்கு மேலும் உற்சாகத்தையும் ஆர்வத்தையும் ஏற்படுத்தியது. எனவே திரும்பவும் 11வது வெளியீடாக அறிவுமஞ்சரி என்ற நூலை வெளியிடுவதில் பெரு மகிழ்ச்சியடைகிறேன்.

ஆயிரம் பூக்கள் மலரட்டும் என்பது போல் ஆக்க பூர்வமான சிந்தனைகள் ஆயிரமாயிரம் சமுதாயத்தில் வளர வேண்டும் என்பதே எனது அவாவும் இலட்சியமும் எதிர்பார்ப்புமாகும்.

இந்நூலில் விடுபட்ட பல விடயங்கள் எனது 12வது வெளியீடாக விரைவில் வெளிவர இருக்கின்றது . இந் நூலில் உள்ள தவறுகள், பிழைகளைச் சுட்டிக்காட்டின் பெரு மகிழ்வுடன் ஏற்பேன்.

இந் நூலின் மூலப்பிரதியுடன் அச்சுப்பிரதியை ஒப்பிட்டுப் பார்த்து உதவிய திரு. ந. கனகசேகரம் அவர்கட்கும் இந்நூலைத் தொகுப்பதற்கு உதவிய துணைவியார் பரமேஸ்வரிக்கும் இந்நூலை அழகுற அச்சுப் பதிவு செய்த ரெக்னோ பிரின்டர்ஸ் அதிபர் தியாகராசா கேசவன் அவர்களுக்கும் எனது நன்றிகள்.

இந்நூலில் சுவையிருந்தால் நண்பர்களுக்கும் தெரிவியுங்கள். குறையிருந்தால் என்னிடம் தெரிவியுங்கள். மகிழ்வுடன் ஏற்றுக் கொள்வேன்.

**நூலாசிரியர்**



# அறிவு மஞ்சரி


1. பகவத் கீதை நூலுக்குத் தடை விதித்த நாடு எது? பாகிஸ்தான்
2. ஆணும் பெண்ணும் ஒரே அலுவலகத்தில் வேலை செய்ய அனுமதிக்காத நாடு எது? சவூதி அரேபியா
3. எல்லாப் புகழும் இறைவனுக்கே என்று கூறும் வேத நூல் எது? "குரான்"
4. கொடியை அரைக்கம்பத்தில் பறக்க விடாத ஒரே ஒரு நாடு எது? சௌதி அரேபியா
5. இந்தியாவில் தடை செய்யப்பட்ட சர்ச்சைக்குரிய புத்தகம் எது? சாத்தானின் வேதம்
6. லியோ டால்ஸ்டாய் எழுதிய போரும் அமைதியும் என்ற நூல் யாரை விவரிக்கிறது? நெப்போலியனை
7. புகை பிடிக்காதவர்களே அமைச்சர்களாக பதவியேற்கும் ஒரே ஒரு நாடு எது?லித்துவேனியா (18 ஆண்டுகளாக நடைமுறையிலிருக்கிறது.)
8. தன் மகளின் காதலை ஏற்று மகாத்மா காந்தியின் மகனுக்கு மணம் முடித்து வைத்தவர் யார்? ராஜாஜி
9. எந்த நாட்டில் நீதிபதிகளை மக்களே தெரிந்து எடுக்கிறார்கள்? அமெரிக்கா
10. பங்களாதேஷின் தலைநகரும், நாணயமும் டக்காதான்
11. எழுத்தாளர் கல்கியால் ஆரம்பிக்கப்பட்டு பின்னர் அவரது மகளால் முற்றுப் பெற்ற நாவல் எது? "அமரதாரா"

12. தனிச்சிங்களச் சட்டம் யாப்புக்கு முரணானது என தீர்ப்புக் கூறிய நீதிபதி யார்? "ஓல்ட் கிறட்ஷர்"

13. 88 நாட்களுக்கு தொடர்ந்து பகலாகவே இருக்கும் நாடு எது? நோர்வே

14. இந்தியாவின் ராணுவப் பாதுகாப்பில் உள்ள நாடு எது? பூட்டான்

15. இயேசு நாதர் எந்த வயதில் உயிர் நீத்தார்? 33 வயதில்



16. போலீஸ்காரர்கள் மீசை வைத்துக் கொள்ள அனுமதிக்காத நாடு எது? பிலிப்பைன்ஸ் '

17. நாட்டின் தேசிய நிகழ்ச்சிகளின் போது இரண்டு வேறுபட்ட கொடிகளை தேசியக் கொடியாக ஏற்றும் நாடு எது? ஆப்கானிஸ்தான்

18. குறைவான பெண் பாத்திரங்களைக் கொண்ட காப்பியம் எது? சிலப்பதிகாரம்

19. இலங்கை கிரிக்கெட் அணி உலகக் கோப்பையை வென்ற போது அணியின் தலைவராக இருந்தவர் யார்? அர்ஜுன ரணதுங்கா

20. வைனை சாதாரண பாட்டில்களில் அடைத்து வைத்தால் கெட்டுப் போகும் அதனால் தான் வையினை நிறம் கலந்த பாட்டில்களில் விற்பனை செய்கிறார்கள்

21. பதிவுத் திருமணம் செய்து கொண்டவர்கள் தேசிய கீதம் பாடி தேசிய உறுதிமொழியை எடுத்துக் கொள்ள வேண்டும் இம் முறை எந்த நாட்டில் உள்ளது? கம்போடியா

22. அமேசன் நதி பாய்ந்து ஓடும் போது பூமத்திய ரேகையை இரண்டு முறை கடந்து செல்கிறது

23. ஒலிம்பிக் போட்டியில் வழங்கப்படும் தங்கப்பதக்கம் 210 கிராம் எடை கொண்டது.

24. எந்த நாட்டில் விவாகரத்துப் பெறுவதற்கு சட்ட அனுமதி தேவையில்லை? அயர்லாந்து

25. டென்மார்க் கடல் மட்டத்திற்கு கீழேயுள்ள நாடு. 483 தீவு-களைக் கொண்டுள்ளது

26. முதலாம் உலகப் போரிலும் 2 ஆம் உலகப் போரிலும் பெரும் தோல்வியை தழுவிக் கொண்ட நாடு எது? ஜெர்மனி

27. உலகில் முதன் முதல் கண் வங்கியை ஆரம்பித்த நாடு எது? இலங்கை

28. 1993ஆம் ஆண்டு முதல் கருணைக் கொலையைச் செய்ய நெதர்லாந்து அரசாங்கம் சட்டப்படி அனுமதியளித்தது.

29. அமெரிக்க ஜனாதிபதியை தெரிவு செய்யும் முறைக்கும் இந்திய ஜனாதிபதி தெரிவுக்கும் உள்ள வேறுபாடு என்ன? அமெரிக்காவில் மக்களே ஜனாதிபதியை தெரிவு செய்-கிறார்கள். இந்தியாவில் ஜனாதிபதியை பாராளுமன்ற உறுப்-பினர்களே தெரிவு செய்கிறார்கள்.

30. அமெரிக்க ஜனாதிபதிகளில் தனது மனைவியை விவாகரத்து செய்த ஒரே ஜனாதிபதி யார்? ரொனால்டு ரீகன் .

31. ஆண்கள் நீளமாகத் தலை முடி வளர்க்கத் தடை செய்துள்ள நாடு எது? சிங்கப்பூர்

32. அமெரிக்கா, கனடாவில் செப்ரெம்பர் மாதம் முதல் திங்கட்-கிழமை தான் தொழிலாளர் தினம் (மேதினம்) கொண்டாடு-கிறார்கள்

33. தாடி வைத்துக் கொள்ள அரசாங்கத்திடம் லைசென்ஸ் பெற வேண்டியது எந்த நாட்டில்? ருமேனியா

34. நேபாள மன்னர்களின் குலதெய்வம் தமிழ் நாட்டிலுள்ள ராமேஸ்வரம் கோவில்தான்

35. திருக்குரானில் எத்தனை எழுத்துக்கள் உள்ளன? 3,23671 எழுத்துக்கள்

36. உலகில் ஆயிரத்திற்கு மேற்பட்ட உபநதிகள் இணையும் ஒரே ஒரு நதி "அமேசன் நதி"

இ. சிறிஸ்கந்தராசா

37. சபாநாயகர் பதவி வகித்து பின்னர் இந்திய ஜனாதிபதிப் பதவிக்கு போட்டியின்றி தெரிவு செய்யப்பட்டவர் யார்? நீலம் சஞ்சீவிரெட்டி

38. எஸ்கிமோக்களின் பனிச் சறுக்கு வண்டியை இழுக்கும் நாய்களுக்கு என்ன பெயர்? ஹஸ்கி

39. எல்லாக் கிரகங்களும் மேற்கிலிருந்து கிழக்காக சுற்ற சுக்கிரன் மட்டும் கிழக்கிலிருந்து மேற்காக சுற்றுகிறது

40. பூமியிலிருந்து வானவில்லைப் பார்க்கும் போது அது நமது கண்களுக்கு அரை வட்டமாகத் தெரியும். அதே வானவில் வானத்தில் பறக்கும் விமானிக்கு முழு வட்டமாகத் தெரியும்.

41. ஹாலந்து நாட்டில் பேசப்படும் டச்சு மொழி உலகில் வேறு எங்கும் பேசப்படுவதில்லை

42. உப்பை புனிதப் பொருளாகப் போற்றும் நாடு எது? ஜப்பான்

43. நேபாள மக்கள் எவரெஸ்ட் சிகரத்தை "சாகர் மாதா" என்றே அழைக்கின்றனர்.

44. காந்தியடிகள் தனது 45 வது வயதில் தான் இந்தியாவில் அரசியல் போராட்டங்களில் ஈடுபடத் தொடங்கினார்



45. கந்தபுராணம், பெயரிய புராணம், இரண்டும் எவற்றை எடுத்து விவரிக்கிறது? கந்த புராணம் முருகப் பெருமானின் புகழைப் பேசுகிறது. பெரிய புராணம் 63 நாயன்மாரின் திருத்தொண்டையும் வரலாற்றையும் பேசுகிறது.

46. பெயருக்குப் பின்னால் மிஸ்டர் போடுவது சீனர்களின் வழக்கம்.

47. தனது 12 வருட ஜனநாயக ஆட்சியில் 9 அரசாங்கத்தை பெற்ற ஆசிய நாடு எது? நேபாளம்

48. 60 கிலோ எடையுள்ள மனிதன் சந்திரனில் 10 கிலோ எடையில் இருப்பான்



49. ஒரு லீற்றர் கடல் நீரைக் காய்ச்சினால் 35 கிராம் உப்பு கிடைக்கும்

50. நோபல் பரிசுகளில் ஒன்று மட்டும் ஸ்டாக் ஹோம் நகரில் வழங்கப்படுவதில்லை அது எது? நோபல் அமைதிப்பரிசு

51. இது வரையில் எத்தனை உலகத் தமிழாராய்ச்சி மாநாடுகள் நடைபெற்றுள்ளன? எட்டு

52. சர்வாதிகாரி ஹிட்லரை சார்லிசப்ளின் எந்த திரைப்படத்தில் கிண்டல் செய்தார்? "திகிரேட் டிக்டேட்டர்"

53. பொருளாதாரத்திற்கு எந்த ஆண்டிலிருந்து நோபல் பரிசு வழங்கப்படுகிறது? 1969

54. இலங்கை மத்திய வங்கியின் கிளை அலுவலகங்கள் அமைந்துள்ள மூன்று இடங்கள் எவை? மாத்தளை - மாத்தறை - அனுராதபுரம்

55. இலங்கையின் பாராளுமன்ற வரலாற்றில் இதுவரை எதிர்க் கட்சியை சேர்ந்த மூவர் சபாநாயகராக பதவி வகித்துள்ளனர் அவர்கள் யார்? ரி.பி. சுபசிங்கா, அனுர பண்டாரநாயக்கா, லொக்கு பண்டார

56. 2002 ல் அமைதிக்கான நோபல் பரிசு பெற்ற அமெரிக்கா ஜனாதிபதி யார்? "ஜிம்மிகார்ட்டர்"

57. அமெரிக்காவில் மிகவும் வயதான காலத்தில் ஜனாதிபதியாக பதவி வகித்தவர் யார்? ரொனால்டு ரீகன் 77 வயதுவரை

58. இந்தோனேசியா நாட்டிலிருந்து பிரிந்த தனி நாட்டின் பெயர் என்ன? "கிழக்கு தைமூர்"

59. நடிகர் திலகம் சிவாஜி கணேசனுக்கு "கலைக்குரிசில்" என்ற பட்டத்தை இலங்கை வானொலி நிலையம் எந்த ஆண்டு வழங்கியது? 1958 ல்

60. யூதர்கள், கிறிஸ்தவர்கள், இஸ்லாமியர்கள், இவர்களின் ஒரே புனித தலம் எது? "ஜெருசலம்"

61. இத்தாலி நாட்டுக்குள் இருக்கும் இரு தனி நாடுகள் எவை? வாடிகன் நகரம், சான் மரினோ,

62. பிரதம மந்திரிப் பதவி இல்லாத நாடு எது? அமெரிக்கா

63. மீன்களையும், முட்டைகளையும் ஏற்றிச் செல்ல தனி ரயில் சேவையுள்ள நாடு எது? ஜப்பான்

64. சூயஸ் கால்வாய் எந்த நாட்டில் உள்ளது? எகிப்து

65. கர்ப்பிணிப் பெண்களுக்கு நீச்சல் போட்டியை நடத்தும் நாடு எது? நியூசிலாந்து

66. ஈராக் மீது அமெரிக்கா போர் தொடுத்ததற்கு பகிரங்கமாக எதிர்ப்புத் தெரிவித்த நாடுகள் எவை? பிரான்ஸ், ரஷ்யா, ஜெர்மனி

67. எந்த ஒரு அமைச்சின் கீழ் இல்லாமலும், சுதந்திரமாக இயங்கும் திணைக்களம் எது? தேர்தல் திணைக்களம்

68. எந்த ஆண்டின் நோபல் பரிசுகள் அனைத்தும் அமெரிக்காவுக்கே கிடைத்தது? 1976

69. 1965 ஆம் ஆண்டு சிங்கப்பூர் மலேசியாவிலிருந்து பிரிந்து தனி நாடானது.

70. இடது கையால் விளையாட தடைசெய்யப்பட்ட விளையாட்டு எது? போலோ

71. இஸ்ரேல் நாட்டு உளவு நிறுவனத்தின் பெயர் என்ன? மொஸாட்

72. வானொலி அறிவிப்பாளராக இருந்து அமெரிக்க ஜனாதிபதியாக வந்தவர் யார்? ரொனால்ட் றீகன்

73. முதல் முதல் சர்வதேச ஒரு நாள் கிரிக்கெட் போட்டி எப்போ ஆரம்பமானது? 1971 ஜனவரி 05

74. எழுத்தாளர் சல்மான் ருஷ்டிக்கு மரண தண்டனை விதித்தவர் யார்? அயத்துல்லா கொமெய்னி


75. அமெரிக்காவில் ஒரே ஒரு நாள் மட்டும் ஜனாதிபதியாக இருந்தவர். கே. போக்

76. இயேசு கிறிஸ்துவின் மறைவிற்கு பின் வரும் காலம் கி.பி என குறிப்பிடப்படுகிறது.



77. வெள்ளிப் பாத்திரங்கள் கறுத்துப் போவதற்கு காரணம் என்ன? காற்றில் கலந்திருக்கும் கந்தகம் தான்

78. 2002ல் இந்திய அரசாங்கம் "பாரதரத்னா" விருதை எவருக்கும் வழங்கவில்லை



79. இந்தியாவில் உள்ள இஸ்லாமிய மக்கள் ஏன் மேற்குத் திசையை நோக்கி தொழுகை செய்கின்றனர்? மெக்கா இருப்பதால்

80. உலகிலேயே ஒரு வருடம் மட்டும் ஜனாதிபதி பதவி வகிப்பவர் எந்த நாட்டவர்? சுவிற்ஸலாந்து

81. உலகில் எத்தனை நாடுகளின் தேசியக் கொடியில் பிறை நிலாச் சின்னம் இடம் பெற்றுள்ளது? ஒன்பது

82. அமெரிக்காவில் தெரியும் கேபில் T.V தமிழ் சனல் எது? சன் T.V (12-09-2002 லிருந்து)

83. ஹங்கேரி நாட்டிற்கு இதுவரையில் எத்தனை நோபல் பரிசுகள் கிடைத்திருக்கின்றன? எட்டு

84. உலகில் எத்தனை நாடுகளின் தேசியக் கொடியில் நட்சத்திர சின்னங்கள் இடம் பெற்றுள்ளன? 41 நாடுகள்

85. ஒரு வருடத்தில் எத்தனை மாதங்கள் 31 நாட்களைக் கொண்டுள்ளது? ஏழு மாதங்கள்

86. இராகு காலம் எத்தனை மணி நேரம் கொண்டது? $1^1/_2$ மணிநேரம்

87. எமகண்டம் எனப்படுவது எத்தனை மணி நேரம் கொண்டது? $1^1/_2$ மணி நேரம்



88. நெப்போலியன் ரஷியா மீது படையெடுத்ததை அடிப்படையாக வைத்து டால்ஸ்டாய் எழுதிய புகழ்மிக்க நாவலின் பெயர் என்ன? போரும் சமாதானமும் (War and peace)

89. யேல் பல்கலைக்கழகத்தில் டாக்டர் பட்டம் பெற்ற தமிழக முதல்வர் யார்? அறிஞர் அண்ணா

90. சாரண இயக்க மாணவர்கள் ஒருவரையொருவர் சந்திக்கும் போது இடது கையை நீட்டி கைகுலுக்குவர்

91. சீனாவில் திருமணம் செய்வதற்கு ஆணுக்கு 28 வயதும் பெண்ணுக்கு 25 வயதும் இருக்க வேண்டும்.

92. திருமணத்திற்கு முதல் நாள் மணப்பெண்ணை இளநீரால் குளிப்பாட்டும் வழக்கம் இந்தியாவில் எந்த மாநிலத்தில் உள்ளது? கோவா

93. சுத்தமான காற்றை தரும் மரம் எது? வேப்பமரம்

94. மண்ணெண்ணெய் பூமியிலிருந்து எடுத்ததும் பச்சையாக இருக்கும்.

95. உலக வங்கியின் ஆண்டுக் கணக்கு செப்டெம்பர் 1ம் திகதி தான் தொடங்குகிறது.

96. டீசல் கார்களுக்கு கார்பரேட்டர் கிடையாது

97. ஞாயிறு தொடங்கி ஞாயிற்றுக்கிழமை முடிவடைந்த வருடம் எது? 1978

98. இரும்புத்துண்டு பாதரசத்தில் மிதக்கும்

99. புரதச் சத்து அதிகம் உள்ள கீரை எது? அகத்திக்கீரை

100. தவில் எருமை மாட்டுத் தோலிருந்து செய்யப்படுகிறது?

101. பாகற்காயில் உள்ள சிறப்பு குடற்புழுக்களை அழிப்பதுடன் நீரிழிவை ஓரளவு கட்டுப்படுத்தும்

102. உலக சமாதானத்தின் காவலன் என்று எந்த அமைப்பைக் கூறுகின்றார்கள்? ஐ.நா. சபை

103. இந்திய மக்கள் விசா இல்லாமல் செல்லவும், இந்திய ரூபாய் சட்டப்படி செல்லும் நாடு எது? பூட்டான்

104. இரத்த வங்கியில் இரத்தத்தை 35 நாட்கள் வரை கெடாமல் பாதுகாப்பாக வைக்கலாம்.

105. காற்று வீசுவது எதனால்? பூமி சுழல்வதால்

106. இராணுவத்தில் சீருடையை அறிமுகப்படுத்தியவர் யார்? மாவீரன் நெப்போலியன்



107. அணுவை பிளந்தவர் ரூதர் போர்டு

108. "லிட்டில் போய்" என்றால் என்ன? உலகப் போரில் பயன்படுத்திய குண்டு

109. நெருப்பு மழை பொழியும் மரங்கள் உள்ள நாடு எது? மலேசியா

110. முஸ்லீம் மதத்தினருக்கு தொடர்புள்ள எண் எது? 786

111. பலா மரத்தில் தான் அதிகமான இசைக்கருவிகள் செய்யப்படுகின்றன.

112. எந்த நாட்டில் பிரதமர் வாழும் இல்லம் "லாட்ஜ்" என்று அழைக்கப்படுகிறது? அவுஸ்திரேலியா

113. மகாவம்சம் எனப்படுவது புத்த சமய நூல்

114. அல்லாவின் பெயர்கள் மொத்தம் எத்தனை? 99

115. ரவீந்திரநாத் தாகூரினால் திறந்து வைக்கப்பட்ட, யாழ்ப்பாணத்தின் மிகப் பழமையான படமாளிகை எது? றீகல்

116. மக்கள் வங்கியால் வெளியிடப்படும் சஞ்சிகையின் பெயர் என்ன? "பொருளியல் நோக்கு"

117. பிரிட்டிஸ் பிரதமர்களில் ஒருவர் மட்டும் சுட்டுக் கொல்லப்பட்டார் அவர் யார்? ஸ்பென்சர் பெர்சிவல்

118. பாகிஸ்தானைவிட இந்தியாவில் உள்ள முஸ்லிம் மக்களின் எண்ணிக்கை அதிகம்

119. தமிழ் மொழியிலிருந்து தோன்றிய மொழி மலையாள மொழி

120. ஜப்பானியருக்கு பிடிக்காத எண் 3

121. ராஜீவ் காந்தி கொலை வழக்கில் எத்தனை பேருக்கு தூக்குத் தண்டனைத் தீர்ப்பு வழங்கப்பட்டது? 26 பேருக்கு

122. தாய்லாந்து மொழிக்கென்று தனி எழுத்துக்கள் கிடையாது சரியா? தவறா? சரி

123. திபெத்திய தலைவர் தலாய்லாமாவிற்கு இந்தியா எந்த மாநிலத்தில் அடைக்கலம் கொடுத்துள்ளது? உத்தரபிரதேசம்

124. இஸ்லாமிய கலண்டரின்படி வருடத்தில் முதல் மாதம் எது? முகரம்

125. வாகனங்களில் கார்பரேட்டரின் வேலை என்ன? காற்றுடன் பெற்றோலைக் கலப்பது

126. அஜந்தா ஓவியம் எதனைக் குறிக்கிறது? புத்த ஜாதகக் கதைகளை.

127. ஒரு பூவின் பெயர் முதல் எழுத்தை நீக்கினால் குரங்காகிவிடும் அப்பூவின் பெயர் என்ன? "சா மந்தி"

128. சனி பகவான் ஒரு ராசியில் இருக்கும் காலம் எவ்வளவு? $2^1/_2$ ஆண்டுகள்

129. போலியோ சொட்டு மருந்தைக் கண்டு பிடித்தவர் யார்? அல்பேட் சேபின்

130. சுக்கிர திசை என்பது எத்தனை ஆண்டுகள்? 20ஆண்டுகள் வரை

131. உரையாடல் இல்லாமல் முழுக்க முழுக்க கவிதையாலேயே நாடகம் எழுதிய கவிஞர் யார்? பாரதிதாசன்

132. ஐக்கிய நாட்டு செயலாளராக மிக அதிக ஆண்டுகள் ஐக்கிய நாட்டு செயலாளராக இருந்தவர் யூதாண்ட், பர்மாவை சேர்ந்தவர் (1961- 1972 வரை)

133. ஒரு ராகத்தின் பெயர் படையப்பாவில் வில்லி அது என்ன ராகம்? நீலாம்பரி

134. சுவிற்ஸலாந்து நாட்டில் இராணுவம் இல்லை.

135. ஏழு குன்றுகளின் மீது அமைந்த நகரம் ரோம். ஏழு மலைகள் மீது அமைந்த இந்திய நகரம் திருப்பதி

136. இந்த நாட்டு அதிபரின் சகோதரர் தான் அந்த நாட்டு இராணுவ அமைச்சர் அது எந்த நாடு? கியூபா

137. கிருமிகளை கொல்வதற்கு நீரில் போடப்படும் பொருள் என்ன? குளோரின்



138. காந்தியை சுட்டுக் கொன்ற கொட்சே ஆசிரியராக இருந்த பத்திரிகையின் பெயர் என்ன? "இந்து ராஜியம்"

139. 10989 இந்த எண்ணை 9 ஆல் பெருக்கினால் விடை சுலபம் இந்த எண்ணை திருப்பி எழுதி விடுங்கள்



140. ஆஞ்சநேயருக்கு அவர் தாய் தந்தையர் வைத்த பெயர் என்ன? சுந்தரன்

141. இரண்டு நாடுகளின் தலைநகரங்கள் அவை அமைந்துள்ள ஆறுகளின் பெயர்களைக் கொண்டுள்ளது? அவை ஆப்கானிஸ்தான் தலை நகர் காபூலும், கனடா தலைநகரும் ஒட்டாவா

142. பாம்பின் விஷம் இளம் மஞ்சள் நிறத்தில் இருக்கும்

143. உலகிலேயே அதிகமான எரிமலைகள் எந்த நாட்டில் உள்ளன? இந்தோனேசியா

144. உலகில் அதிகமாக கிடைக்கும் உலோகம் எது? அலுமினியம்

145. மேலிருந்து கீழாக எழுதப்படும் இரண்டு மொழிகள் எவை? சீனமொழி, யப்பான் மொழி

146. கிறிஸ்தவ வேதமான புனித பைபிளில் வீட்டில் வளர்க்கப்படும் பூனை பற்றிய எந்தக் குறிப்பும் இல்லை

147. கௌதம புத்தரின் இயற் பெயர் என்ன? சித்தார்த்தர்

148. திருமணம் செய்து கொண்ட கடைசி கத்தோலிக்க போப் பாண்டவர் யார்? 2ம் அட்ரியன்

149. எந்த நாட்டில் ஒவ்வொரு ஆண்டையும் ஏதாவது ஒரு விலங்கின் பெயரை வைத்து குறிப்பிடுகிறார்கள்? சீனா

150. சார்லி சாப்ளின் நடித்த முதல் திரைப்படம் எது? திகிரேட் டிக்டேட்டர்

151. ஏ.ஆர். ரஹ்மான் இசையமைத்த ஆங்கிலப்படம் எது? Bombay Dreams

152. ஒரு கிலோ கிராம் எடையுள்ள எந்தப் பொருள் சரியாக ஒரு லீட்டர் இருக்கும்? தண்ணீர்

153. இரு கண்டங்களில் இருக்கும் நாடு எது? ரஷியா (ஆசியா ஐரோப்பா)

154. "தி இன்சைடர்" என்ற ஆங்கில நூலை எழுதிய பாரதப் பிரதமர் யார்? நரசிம்மராவ்

155. சைக்கிள் ஓட்டுவோருக்கு அலவுன்ஸ் எந்த நாடு வழங்குகிறது? சைனா

156. 1974 ஆம் ஆண்டு ஒப்பந்தப்படி இலங்கைக்கு இந்தியா விட்டுக் கொடுத்த தீவு எது? கச்ச தீவு

'7. அரசியல் வாதிகள் என்றால் முதலில் நினைவுக்கு வருவது என்ன? பொய் வாக்குறுதி, லஞ்சம்

உலகிலேயே பெரிய பணக்காரர் யார்? பில்கேட்ஸ்

உலக நாடுகளின் பெட்ரோல் உற்பத்தியில் 2வது இடத்தை பிடித்துள்ள நாடு எது? ஈராக்

50. ஒரே திகதியில் உயிரிழந்த அமெரிக்கா ஜனாதிபதிகள் யார்? ஜான் ஆடம்ஸ், தாமஸ் ஜபர்ஸன், ஜேம்ஸ் மன்றோ

161. அணுக்குண்டு வீச்சினால் அழியாத பூச்சியினம் எது? கரப்பான் பூச்சி

162. நோபல் பரிசுத் தொகைக்கு வரி செலுத்த தேவையில்லை

163. உலகிலே முதன் முதல் பொது இடங்களில் சிகரட் புகைக்க தடை விதித்த நாடு எது? அயர்லாந்து 29 மார்ச் 2004

164. இஸ்தான்புல் என்னும் நகரத்தில் உள்ள மசூதிகளின் எண்ணிக்கை 444

165. தமிழில் கிடைத்துள்ள தொன்மையான இசை நூல் பரிபாடல்

166. இந்தியாவில் பிரபல தினசரி தினத்தந்தி பத்திரிகையை வெளியிடும் நிறுவனம் தான் வார சஞ்சிகை ராணி மற்றும் மாலை மலர் பத்திரிகையும் வெளியிடுகிறது.



167. 70 ஆண்டுகள் அமெரிக்காவின் கட்டுப்பாட்டில் இருந்த கால்வாய் எது? பனாமாக் கால்வாய்

168. கத்தோலிக்கர்களுக்கும் புரட்டஸ் தாந்துகளுக்கும் 30 ஆண்டுகள் நடந்த போரின் பெயர் என்ன? சிலுவைப்போர்

169. நிக்கல் உலோகம் காந்தத்தால் ஈர்க்கப்படும்

170. உடலில் மிகச் சிறிய எலும்பு காதில் உள்ளது

171. எக்ஸ் கதிர்களால் குணமாக்கப்படுவது புற்றுநோய்



172. கால் பந்தாட்டப் போட்டிகளில் வீரர்களை எச்சரிக்கப்பயன்படுத்தப்படும் சிவப்பு மஞ்சள் கார்டுகள் எப்போது அறிமுகப்படுத்தப்பட்டன? 1970 உலகப் போட்டியில்

173. கிளியை குறிக்கும் மறு பெயர்களாவன அரி, தத்தை, சுகம், வன்னி, கிள்ளை, கீரம் என்பனவாகும்

174. கெந்தகம் நீரில் கரையுமா? கரையாதா? கரையாது

175. காய்கறிகளும், பழவகைகளும் எந்த விட்டமினை தம்மிடம் பெற்றிருப்பதில்லை? விட்டமின் D

176. தென் அமெரிக்காவில் பெட்றோலியம் உற்பத்தியில் முதலிடம் வகிப்பது எந்த இடம்? வெனிசுலா

177. நேபாள நாட்டு பாராளுமன்றத்தின் பெயர் என்ன? நேஷனல் பஞ்சாயத்து

178. போதி மரம் என்று அழைக்கப்படுவது அரச மரம்

179. ஐந்து நாள் கிரிக்கெட் போட்டியை ஒரு நாள் மேட்சாக மாற்றியவர் யார்? கெரி பெக்கர்

180. போரில் வெற்றி பெற்ற போதும் இனி போர் வேண்டாம் என்ற மன்னர் யார்? சாமராட் அசோகன்

181. புகழ் பெற்ற ஒரு இந்திய நினைவுச் சின்னத்தின் மேல் விமானம் பறக்கக்கூடாது என்று தடை விதிக்கப்பட்டுள்ளது அது எது? தாஜ்மகால்

182. உலகில் முதல் குளோனிங் குழந்தையின் பெயர் என்ன? ஏவாள் (Eve) 31 வயது அமெரிக்கா பெண்ணுக்கு பிறந்தது

183. வெந்நீர் ஊற்றுக்கள் அதிகமுள்ள நாடு எது? பின்லாந்து

184. பறவைகளின் எச்சத்தை சேகரித்து உரமாக ஏற்றுமதி செய்யும் ஒரே நாடு எது? நௌரு

185. நாட்டின் அரசே நாடு முழுவதற்கும் குழாய்கள் மூலம் வெந்நீர் விநியோகிக்கும் ஒரே நாடு எது? பின்லாந்து

186. எந்த நாட்டு மக்கள் எல்லா உணவுகளிலும் தேன் சேர்த்து சமைக்கின்றனர்? போலந்து

187. கைக் கடிகாரத்தையே திருமண மோதிரம் போல் பயன் படுத்தும் ஒரே ஒரு ஆசிய நாடு எது? ஜப்பான்

188. கல்கண்டு ஆசிரியர் தமிழ்வாணனுக்கு தபால் தலை வெளியிட்ட நாடு எது? கனடா (2002ல்)

189. அரிசியிலிருந்து பீர் தயாரிக்கும் இரு நாடுகள் எவை? ஜப்பான், கொரியா

190. இயேசுவின் கடைசி விருந்தில் கலந்து கொண்ட 13 வது விருந்தாளி யார்? யூதாஸ்

191. கோள்களில் மிக வேகமாகச் சுற்றுவது எது? புதன்

192. கோள்களில் மிகச் சிறியது எது? அத்துடன் மிக குளிராக உள்ள கோளும் இதுதான் புளூட்டோ

193. உலகிலேயே அதிக பெண் மந்திரிகள் கொண்ட நாடு எது? சுவிடன்

194. ஜப்பான் மொழியில் ஓய்வு என்று பொருள்படும் வார்த்தை கிடையாது?

195. வானொலிப் பெட்டி இயங்க 9 வோல்ட் மின்சாரம் போதுமானது

196. உலர்ந்த திராட்சையை மதிப்பு மிகுந்த பழமாக குறிப்பிடும் வேத நூல் எது? பைபிள்

197. சுவிற்ஸலாந்து நாட்டுக்கு தனியான தேசிய மொழி கிடையாது



198. பிரெஞ்சு மொழிக்கு சொந்தமாக எழுத்துகள் கிடையாது

199. செப்டெம்பர் மாத கடைசி வாரத்தில் எந்த மதத்தினருக்கான புத்தாண்டு வருகிறது? யூதமதம்

200. உலகிலேயே பெண்கள் சதவீதம் மிகக் குறைந்த நாடு எது? ஐக்கிய அரபு எமிறேற்ஸ் $32\ ^1/_2$ சதவீதம்

201. ஆசியாவில் எந்த நாட்டு மக்கள் 8 ஆம் எண்ணை மிக அதிஸ்டமாக கொள்கிறார்கள்? சீனர்

202. 35 வருடங்களுக்கும் மேலாக தென் கொரியாவை அடிமை நாடாக வைத்திருந்தமைக்காக மன்னிப்புக் கேட்ட நாடு எது? ஜப்பான்

203. அமெரிக்க ஜனாதிபதிகளில் 90 வயதுக்கு மேல் வாழ்ந்து கொண்டு இருப்பவர் யார்? ரொனால்டுரீகன் (2002ல் 91 வரை)

204. காற்றில் உள்ள நைட்ரஜனில் இருந்து இரசாயன உரத்தை தயாரித்த முதல் நாடு எது? நியூசிலாந்து

205. உலகில் மிக நீளமான சுரங்கப் பாதை உள்ள நாடு எது? நோர்வே

206. யாருடைய இல்லத்தில் எருக்கு பூக்கும் என்று பைபிளில் கூறப்பட்டுள்ளது? பொய் சாட்சி கூறுவோர் இல்லத்தில்

207. தமிழரசுக் கட்சியினர் யாழ் கச்சேரி முன்பு 20-2-1961ல் சத்தியாக்கிரகம் 56 நாட்கள் தொடர்ந்து இருந்து 17-4-1961ல் இராணுவம் வந்து தடை செய்தது.

208. தமிழரசுக்கட்சி 14-4-1961ல் 10 சத முத்திரை வெளியிட்டு தபால் சேவையை ஆரம்பித்தார்கள் (யாழ் கச்சேரி முன்பாக)

209. 18-4-1961 ல் யாழ் கச்சேரியில் சத்தியாக்கிரகம் இருந்த 74 முக்கிய பிரமுகர்களை கைது செய்து கொழும்பில் பனாகொடை இராணுவ முகாமில் சிறையில் வைத்தனர்

210. 1974 ல் ஜனவரி 9ம் திகதி யாழ்ப்பாணத்தில் நடந்த இறுதிநாள் உலக தமிழராய்ச்சி மாநாட்டில் பொலிஸ் அட்டகாசத்தில் மின்சாரக்கம்பிகள் அறுந்து விழுந்ததால் ஒன்பது பேர் அகால மரணமானார்கள்

211. அரசாங்கத்தினால் தமிழரசுக்கட்சியும், சுதந்திரன் பத்திரிகையும் முதன் முதல் தடை செய்யப்பட்டது. 18-04-1961ல்

212. இயேசு பெருமான் எந்த அரண்மனையில் குற்றவாளி எனக் கூறப்பட்டார்? காவிபாசு

213. 57 ஆண்டுகளாக இந்தியாவின் எந்த வங்கியின் பாதுகாப்பு பெட்டகத்தில் காந்தியின் அஸ்தி வைக்கப்பட்டிருக்கிறது (ஸ்டேட் பாங்க் ஆப் இந்தியா)

214. குர்-ஆன் முதன் முதலில் எந்த மொழியில் எழுதப்பட்டது அராபிக்

215. இறைச்சிக்கு இணையான புரதச்சத்து எந்தக் காய்கறியில் உள்ளது? சோயா பீன்ஸ்

216. இஸ்லாமியர் திருமணத்தை என்னவென்று கூறுவர்? நிக்காஹ்

217. எந்த நிறத்துடன் மஞ்சள் நிறத்தைக் கலந்தால் பச்சை நிறம் கிடைக்கும்? நீலம்

218. உணவை இலைகளிலேயே வைத்துள்ள செடி எது? முட்டைக்கோஸ்

219. காஸ்பியன் கடல் இரு நாடுகளில் உள்ளது

220. பிராகிருதமும் தமிழும் கலந்ததே தெலுங்கு மொழி

221. லத்தீன் மொழியில் உள்ள எழுத்துக்களின் எண்ணிக்கை 21 தான்

222. நட்சத்திரம் எந்த மதத்தின் சின்னம்? யூத மதம்

223. பேஸ்மேக்கர் கருவி எதற்குப் பொருத்தப்படுகிறது? இதய துடிப்பை சீராக்க.

224. காலை நட்சத்திரம் என்பது சுக்ரன்

225 வீனஸ் கிரகம் மாலை நட்சத்திரம் என அழைக்கப்படுகிறது

226. பிளாட்டினம் எந்த அமிலத்தாலும் கரைக்க முடியாத உலோகம்

227. பிராட்டஸ்டன்ஸ் கிருஸ்தவர்கள் அதிகம் வாழும் முதல் நாடு பிலிப்பைன்ஸ்



228. இருபதாம் நூற்றாண்டில் எத்தனை முழுச் சூரிய கிரகணங்கள் தோன்றின? அறுபத்தாறு

229. பத்தாயிரம் ஆண்டின் மரண தண்டனையை முற்றிலும் ரத்துச் செய்த முதல் நாடு எது? பல்கேரியா

230. தெற்காசிய நாடுகளில் சிலந்திகளை தின்ன ஆரம்பித்த முதல் நாடு எது? கம்போடியா (வறுமை தான் காரணம்)


231. 101 அணுசக்தி நீர் மூழ்கிக் கப்பல்கள் வைத்துள்ள நாடு எது? அமெரிக்கா

232. இத்தாலி, ஜெர்மனி, சீனா ஆகிய நாடுகளில் 2ம் உலகப் போரில் எந்த நாடு கலந்து கொள்ளவில்லை? சீனா

233. சந்திரனில் ஒரு நாள் என்பது பூமியில் 14 நாட்களுக்கு சமன்

234. உலகில் நடந்த சிறிய போர் 35 நிமிடங்கள் மட்டுமே எந்த இரு நாடுகளுக்கிடையே நடந்தது? இங்கிலாந்து சான்சிபார் (1896)

235. கடல் தண்ணீரை சுத்திகரித்து கிணற்று நீருடன் சேர்த்து குடி தண்ணீர் வழங்கும் நாடு எது? குவைத்



236. இந்தியாவில் நிதி மந்திரியாக இருந்த மொராஜி தேசாய், மன்மோகன்சிங் ஆகியோர் பிரதமராக வந்தார்கள். ஆனால் நிதி மந்திரியாக இருந்து ஜனாதிபதியாக வந்த ஒரே ஒருவர் வெங்கட்ராமன்

237. காங்கிரஸ் கட்சியைச் சாராத இந்திய முதல் ஜனாதிபதி என்ற பெருமை வி.வி. கிரிக்கு உண்டு.

238. யூரோ நாணயம் (Euro) 1999 ஜனவரி 1ல் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

239. இரத்த குறூப்புகளில் "O" வகையைப் பெற்றவர்கள் நீண்டநாள் வாழ்வதாக ரஷ்ய விஞ்ஞானிகள் கண்டு பிடித்திருக்கிறார்கள்.

240. கடல் நீர் 35 சதவீத உப்பாக இருப்பதால் தான் மனிதனால் அருந்த முடியவில்லை.

241. 2 ஆம் உலகப் போரின் போது நடு நிலை வகித்த சில ஐரோப்பிய நாடுகளில் ஸ்பெயினும் ஒன்று

242. கொரியா நாட்டில் அரிசியிலிருந்து தயாரிக்கின்ற பியரின் பெயர் சுக்

243. துணியிலான கொடியை தேசியக் கொடியாக அறிவித்த முதல் நாடு டென்மார்க் ஆண்டு 1218

244. அரேபியத் தீபகற்பத்தில் எண்ணெய் உற்பத்தியில் முதலிடம் பெற்றிருக்கும் நாடு எது? சௌதி அரேபியா

245. இந்தோனேசியாவின் மற்றொரு பெயர் ஈஸ்ட் இண்டிஸ் என்பதாகும்

246. அரேபிய தீபகற்பகத்தில் மிகச்சிறிய தீவு பஹ்ரைன் ஆகும்

247. மருத்துவத்திற்கு வழங்கப்படும் நோபல் பரிசை அதிக முறை பெற்ற முதல் நாடாக அமெரிக்காவே திகழ்கிறது (1991 வரை 60 முறை).

248. விமான நிலையத்திலேயே ஜனாதிபதி பதவி ஏற்ற அமெரிக்க ஜனாதிபதி யார்? லிண்டன் ஜோன்சன்

249. முதல் உலகப் போரில் இங்கிலாந்து பயன்படுத்திய விஷ வாயு எது? குளோரின் கேஸ்

250. பத்திரிகையாளராக இருந்து ஜப்பான் நாட்டின் பிரதமரானவர் யார்? யாஷிரோ மோஷி

251. காந்தி தென் ஆபிரிக்காவில் இருந்த போது நடத்திய பத்திரிகை எது? "இந்தியன்" ஒப்பீனியன்"

252. பிரான்ஸ் நாட்டில் முப்பது வயதுக்குள்ளேயே எல்லாத் தரப்பு இராணுவ வீரர்களுக்கும் ஓய்வு கொடுத்து விடுகிறார்கள்

253. சுவிடன் நாட்டு பிரஜைகள் கண்டிப்பாக 12 மாதங்களுக்கு இராணுவத்தில் பணியாற்ற வேண்டும்

254. வாழைப்பழத்தில் 75 சதவிகிதம் தண்ணீர் தான் உள்ளது. ஆனால் A,B,C,D ஆகிய நான்கு விட்டமின்கள் உள்ளன

255. வெள்ளை மாளிகைக்கு நடந்தே சென்று பதவி ஏற்ற முதல் அமெரிக்க ஜனாதிபதியார்? ஜிம்மிகார்ட்டர்



256. சதாம் உசேயின் இரு புதல்வர்களான உதய், குசய் என்போர் அமெரிக்கப் படைகளால் 22 யூலை 2003ல் சுட்டுக் கொல்லப்பட்டனர்

257. இந்தோனேசியாவில் 167 எரிமலைகள் இருக்கின்றன

258. கிரகங்களில் பெரியது ஜுபிடர்

259. கிரகங்களில் வெப்பமானது வீனஸ்


260. பூமிக்கு அருகில் உள்ளது வீனஸ்

261. மத்திய தரைக்கடலில் முக்கோண வடிவில் அமைந்துள்ள தீவு எது? சிசிலி

262. உலகிலேயே அதிக மக்களால் பேசப்படும் மொழி சீனமொழி

263. அதிக வயதில் எவரெஸ்ட் சிகரத்தில் ஏறியவர் யார்? Dr.ஷெர்மன் புல் (64 வயது) அமெரிக்காவைச் சேர்ந்தவர்

264. சீனாவுக்கு 13 நாடுகள் எல்லையாக உள்ளன அவையாவன பாகிஸ்தான், இந்தியா, நேபாளம், பூட்டான், பர்மா, லாவோஸ், வடகொரியா, ரஷியா, மங்கோலியா, ஆப்கானிஸ்தான், வியட்நாம், மகாவ், ஹொங்கொங்



265. இலங்கையில் 6 வருடங்களில் 5 தேர்தல்கள் நடைபெற்றுள்ளன இறுதியாக 13வது நாடாளுமன்றத் தேர்தல் 2 ஏப்ரல் 2004ல் நடைபெற்றது.

266. வடக்கு கிழக்கு மாகாணத்தின் 5 தேர்தல் மாவட்டங்களிலிருந்து 31 பாராளுமன்ற உறுப்பினர்கள் தெரிவாவர் என தேர்தல் திணைக்களம் அறிவித்துள்ளது.

267. 100 வது நோபல் பரிசைப் பெற்ற பெருமை பெற்றவர் ஐ.நா. செயலாளர் கோபி அனான்

268. காலையில் ஒரு திசையிலும், மாலையில் ஒரு திசையிலும் பாயும் நதி ஐராவதி

269. ஐராவதி பர்மாவில் ஓடும் நதி. இது காலையில் மேற்கிலும் மாலையில் கிழக்கு நோக்கிப்பாயும்

270. ஐஸ்லாந்தில் நள்ளிரவிலும் சூரியனைக் காணலாம்

271. கிரகங்களில் ஒன்றான பூமியைத் தான் உலகம் என்று கூறுகிறோம்.

272. இலங்கையில் 9 மாகாணங்கள் 25 நிர்வாக மாவட்டங்கள் 22 தேர்தல் மாவட்டங்கள் உள்ளன

273. அமெரிக்க ஜனாதிபதி பதவி வகித்த ஒருவர் பிரிட்டிஷ் இராணுவ அதிகாரியாக பதவி வகித்துள்ளார் அவர் யார்? ஜோர்ஜ் வாசிங்டன்

274. கொலம்பஸ் அமெரிக்காவை கண்டு பிடித்து 500 ஆண்டு நிறைவையொட்டி அவருக்கு சிறப்பு தபால் தலை வெளியிட்ட நாடு எது? பிரான்ஸ்

275. ஓர் ஆண் எலியும் ஒரு பெண் எலியும் ஒரு வருடம் சேர்ந்து வசித்தால் எத்தனை குட்டிகள் பிறக்கும்? 880 குட்டிகள்

276. நீல் ஆம்ஸ்ட்ராங் சந்திரனில் தங்கியிருந்த நேரம் எவ்வளவு தெரியுமா? 22 மணி நேரம்

277. பதவியில் இதுக்கும் போதே இறந்த ஒரே இந்தியா ஜனாதிபதி டாக்டர் ஜாகீர் உசேன்

278. உலகெங்கும் முட்டாள்கள் தினமாகக் கொண்டாடப்படும் ஏப்ரல் 1ம் திகதி பிரான்சில் மட்டும் மீன்கள் தினமாக கொண்டாடுகிறார்கள்

279. அசல் வைரங்கள் குளிர்ச்சியாக இருக்கும் ஆனால் வைரங்கள் தொடும் போது இந்தக் குளிர்ச்சியை நம்மால் உணர முடியாது

280. கிமோனோ (Kimono) என்பது ஜப்பானியரின் தேசிய உடை

281. ஈரான், பல்கேரியா, ஹங்கேரி, ஓமான், இத்தாலி அயர்லாந்து ஆகிய நாடுகளின் தேசியக் கொடிகள் இந்திய தேசியக் கொடியின் நிறங்களைப் போன்று உள்ளன.

282. எண்ணெயும் தண்ணீரும் ஒன்று சேராது ஒரு துளி சோப்பை கலந்தால் சேர்ந்து கொள்ளும்



283. அமெரிக்க உளவு நிறுவனமான சி.ஐ.ஏ யின் இயக்குநர் ஆக பணிபுரிந்து அமெரிக்க ஜனாதிபதியானவர் ஜோர்ஜ் புஸ்

284. 545 ஆசனங்கள் உள்ள இந்தியப் பாராளுமன்றத்தில் (1984 ல்) 415 ஆசனங்களை பெற்று ஆட்சி அமைத்த ஒரே ஒரு இந்தியப் பிரதமர் ராஜீவ்காந்திதான்

285. விடுதலைப்புலிகள் ஆனையிறவு இராணுவ முகாமை கைப்பற்ற 2000 ஆம் ஆண்டு மார்ச் 26ல் ஆரம்பித்த கடும்சமர் ஏப்ரல் 25ல் வரை 720 மணித்தியாலம் இரவு பகல் தொடர்ந்த யுத்தத்தின் பின் ஆனையிறவு முகாம் கைப்பற்றப்பட்டது.

286. 2000 ஆம் ஆண்டு ஜுலை 24ல் கட்டுநாயக்கா சர்வதேச விமான நிலையம் விடுதலைப்புலிகளால் தாக்கப்பட்டது.

287. 13வது பாராளுமன்ற பிரதமராக ஏப்ரல் 6ல் 2004 ல் மகிந்த ராஜ பக்ஷ பிரதமராக பதவி ஏற்றார்.



288. ரணில் விக்கிரமசிங்கா எழுதிய நூலின் பெயர் அரசியலும் தர்மமும்

289. கத்தோலிக்க மதத்தின் முதல் போப் பாண்டவரின் பெயர் என்ன? செயின்ட் பீட்டர்

290. ஆபிரிக்கக் கண்டத்தின் முதல் குடியரசு நாடு எது? லைபீரியா

291. கடந்த 200 ஆண்டுகளில் குறைந்த வயதில் பிரிட்டிஸ் பிரதமராக பதவியேற்றவர் யார்? டொனி பிளேயர் 43வது

292. பகவத் கீதை யாரால் யாருக்கு உபதேசிக்கப்பட்டது? கிருஷ்ண பரமாத்மாவால் பஞ்ச பாண்டவர்களில் ஒருவரான அர்ச்சுனனுக்கு உபதேசிக்கப்பட்டது.

293. கடல் நீரைக் கொண்டு ஐஸ் தயாரித்தால் அந்த ஐஸ் உப்புக்கரிக்குமா? உப்புக் கரிக்காது

294. ஏனென்றால் கடல் நீரை உறைய வைக்கும் போது கடல் நீர் மட்டுமே ஐஸாக மாறுகிறது அதில் உள்ள உப்பு தனியே பிரிந்து விடுகிறது

295. அவுஸ்திரேலியா பறவையான குவாரியனிடம் ஒரு அதிசயக் குணம் உள்ளது? இப்பறவை குளிக்காமல் தன்கூட்டுக்கு செல்லாது.

296. அமெரிக்கா ஜனாதிபதி தேர்தலில் சர்ச்சை ஏற்படுத்திய புளோரிடா மாகாணம் ஸ்பெயினிலிருந்து பிரிந்து வந்தது

297. 2ம் உலகப் போரில் அமெரிக்காவிடம் ஜப்பான் சரணடைவதாக அறிவித்த 02.09.1945 உடன் 2ம் உலகப் போர் முடிவடைந்தது

298. சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் சுவிற்சலாந்து நாட்டை சேர்ந்த சேர் ஹென்றி டுனால் என்பவரால் 1963 ல் ஜெனிவா நகரில் ஆரம்பிக்கப்பட்டது.

299. இந்தியா பாகிஸ்தானின் ஒற்றுமையின்மைக்கு காரணம் கஸ்மீர் பிரதேசம் தான்

300. சார்ஸ் வைரஸ் நோய் முதன் முதலில் சீனர் நாட்டில் தான் பரவியது

301. அரச பாடசாலைகளில் முஸ்லிம் மாணவிகள் பர்தா அணியக் கூடாது என்ற சட்டத்தை பிரான்ஸ் அமுலாக்கியுள்ளது

302. திருமுருக கிருபானந்த வாரியார் சுவாமிகள் விமானத்தில் பயணம் செய்து கொண்டிருந்த போது அவரது உயிர் பிரிந்தது. 27 நவம்பர் 1997

303. திரிபிடகம் என்பது எந்த மதத்தினரின் புனித நூல்? புத்த மதம்

304. குருதேவ் என்று அழைக்கப்படும் பிரபல கவிஞர் யார்? ரவிந்திர நாத் தாகூர்

305. தமிழகக் கவிஞருள் 1996 ஆம் ஆண்டிற்கான பாவேந்தர் விருது யாருக்கு கிடைத்தது? கவிஞர் வைரமுத்து

306. சூரிய குடும்பத்தில் மொத்தம் எத்தனை கோள்கள் உள்ளன? ஒன்பது

307. சென்னைப் பல்கலைக்கழகத்தின் முதல் பட்டதாரியான இலங்கைத் தமிழறிஞர் யார்? எந்த ஆண்டில்? சி. வை தாமோதரம் பிள்ளை 1857 ஆல்



308. பானு சின்ஹா என்பது எந்த பிரபல கவிஞரின் மறுபெயர்? ரவிந்திரநாத் தாகூர்

309. முதலாம் ஜான்பால் எவ்வளவு காலம் போப்பாண்டவராக இருந்தார்? 33 நாட்கள்

310. ஜாவா, சுமத்திரா, போர்னியோ, செலிபஸ் நியூகின் தீவுகள் எந்த நாட்டில் அடங்கியுள்ளன? இந்தோனேசியா

311. ஜீலியஸ் சீசரின் நம்பிக்கைத் துரோகியான நண்பன் யார்? புருட்டஸ்

312. உலகில் "ஏ" குருப் இரத்தப் பிரிவினர் அதிகம் உள்ள முதல் நாடு எது? நோர்வே.

313. உலகில் ஓ (O) குறூப் இரத்தப் பிரிவினர் அதிகம் உள்ள முதல் நாடு எது? அமெரிக்கா

314. மொழிவாரியாக நீதிபதிகள் உள்ள ஒரே நாடு எது? சுவிற்சர்லாந்து

315. தினமும் நடைப்பயிற்சியால் தடுக்கப்படும் மூன்று அபாயகர மான நோய்கள் எவை? இரத்தக் கொதிப்பு, ஸ்ரோக், மாரடைப்பு

316. மார்ச் மாதம் 21ம் தேதி புத்தாண்டு தினம் கொண்டாடும் மக்கள் உள்ள நாடு எது? ஈரான்

317. எந்த நாட்டு மக்கள் புத்தாண்டு தினம் ஜனவரி முதல் பெப்ரவரி 19 க்குள் வருகிறது? சீன மக்கள்

318. நான்கு வரிகளைக் கொண்ட தேசிய கீதங்கள் உள்ள மூன்று நாடுகள் எவை? ஜப்பான் ,ஜேர்மன், ஜோர்டான்.

319. எவரெஸ்ட் சிகரத்தில் ஏறிய முதல் தந்தையும் மகனும் யாவர் எட்மண்ட் ஹில்லாரி அவரது மகன் பீட்டர் ஹில்லாரி 1992 ல் ஏறினர்

320. பிரிட்டிஷ் பாராளுமன்றத்தில் கொண்டாடப்பட்ட இந்துப் பண்டிகை எது? தீபாவளி பண்டிகை 2002ம் ஆண்டு கொண்டாடப் பட்டது

321. உலகில் தாயின் பெயரையே இனிஷலாக கொண்டு திரு மணத்திற்கு பிறகும் பின்பற்றும் பெண்கள் உள்ள நாடு எது? ஐஸ்லாந்து

322. எந்த இந்திய ஜனாதிபதியின் சுயசரிதை சீனா முதன் முதலாக சீன மொழியில் வெளியிட்டது? ஏ.பி.ஜே. அப்துல் கலாம்

323. டாக்டர்கள் கருணைக் கொலை செய்ய அனுமதித்துள்ள முதல் இரு நாடுகள் எவை? நெதர்லாந்து, பெல்ஜியம்

324. உலக வங்கியில் எத்தனை நாடுகள் உறுப்பினர்களாக உள்ளன? 151

325. கரீபியன் கடலில் உள்ள மிகப் பெரிய தீவு எது? கியூபா

326. மக்கள் அதிகம் வசித்தாலும் பாம்புகள் இல்லாத தீவு எது? ஹாவாய் தீவு

327. 2002ம் ஆண்டு சுதந்திர நாடாக மலர்ந்து ஐ.நா சபையில் 191 வது நாடாக எந்த நாடு இணைந்தது? கிழக்கு தைமூர் (East timori 20.05.2002 ல்)

328. கடல் நீர் நாட்டுக்குள் புகுந்து விடாமல் இருக்க 2400 கி.மீட்டர் தூரத்திற்கு, தடுப்புச்சுவர் கட்டியுள்ள நாடு எது? நெதர்லாந்து



329. புகழ் பெற்ற மோனலிசா ஓவியம் எந்தப் பேரரசரின் குளியலறையில் மாட்டப்பட்டிருந்தது? நெப்போலியன்

330. ஷேக்ஸ்பியர் எழுதிய நாடகங்களில் நீளமானது ஹாம்லெட் இவர் எழுதிய நாடகங்களில் சிறியது? தி. காமெடி ஆ:.ப்ரர்ரர்.

331. "ஏ" இது தமிழ் எழுத்து. இதை தலை கீழாக எழுதினால் அது வங்காளி எழுத்து. வங்காளிகளின் முதல் மாதம் வைகாசி

332. முதல் உலகத் தமிழாய்ச்சி மாநாடு எந்த நாட்டில் நடைபெற்றது? 1966ல் மலேசியா கோலாலம்பூர்.

333. சளி என்பது நோயல்ல, நம் உடலிலுள்ள சில உறுப்புக்கள் நச்சுப் பொருள்களால் பாதிக்கப்படும் போது அதை தடுக்க உதவுவது சளி.



## சில இயற்கை மரணங்களும் அகால மரணங்களும்

334. பிரதமர் பதவியிலிருக்கும் போது S.W.R.D பண்டாரநாயக்கா சுட்டுக்கொல்லப்பட்டது 26 செப்டெம்பர் 1959.

335. பாராளுமன்ற உறுப்பினர்களான வி. தர்மலிங்கமும் மு.ஆலால சுந்தரமும் ஒரே நாளில் சுடப்பட்டு மரணமானது 2 செப் 1985ல்

336. ஊடகவியளாளர் நிமலராஜன் 20-10-2000 லும் ஜி. நடேசன் 31-05-2004 விலும், T.சிவராம் 29-04-2005 ல் சுடப்பட்டு மரணமானார்கள்

337. நடிகர் விஜய குமார ரணதுங்கா 1989 ல் சுடப்பட்டு மரணமானார்

338. ஜனாதிபதி ரணசிங்கா பிரேமதாச 1.-5-1993 மேதின ஊர்வலத்தில் ஆமர் வீதிச்சந்தியில் மனித குண்டு வெடித்து மரணமானார்.

339. பாராளுமன்ற உறுப்பினர் நீலன் திருச்செல்வம் 29-7-99 சுடப்பட்டு மரணமானார்.

340. மூதூர் பாராளுமன்ற உறுப்பினர் தங்கத்துரை 5-7-97 ல் சுடப்பட்டு மரணமானார்

341. சண்டிலிப்பாய் கல்வளை குமாரசுவாமி விநோதன் சுடப்பட்டு மரணமானது 28-4-1995 ல்

342. முதலாம் ஆண்டு பல்கலைகழக பொறியியல் மாணவன் வரப்பிரகாஸ் பகிடிவதையால் சித்திரவதை செய்யப்பட்டு மரணமானது 26-10-97ல்

343. புகழ் பெற்ற சிங்கள திரைப்பட நடிகை ருக்குமணிதேவி விபத்தில் மரணமானது 29-10-1978 ல்

344. முன்னாள் யாழ் மேயரும், பாராளுமன்ற உறுப்பினர் அல்பிரட் துரையப்பா பொன்னாலை வரதராச பெருமாள் கோயிலின் முன் சுடப்பட்டது. 25-7-75ல்

345. முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் M.H.M அஸ்ரப் ஹெலிகொப்டரில் பயணம் செய்த போது மலையுடன் மோதுண்டு

மரணமானது 16-09-2000ல்

346. லெப்டினன் கேணல் தீலிபன் உண்ணா நோன்பு இருந்து உயிர் நீத்தது 26-09-1987 (இராசையா பார்த்தீபன்)

347. ஜான். எப். கென்னடி அமெரிக்கா ஜனாதிபதியாக பதவி வகித்த மொத்த நாட்கள் 1000 நாட்கள்

## அறிஞர் பெரியோர்களின் இயற்பெயர்கள்

348. காரைக்கால் அம்மையாரின் இயற்பெயர்? "புனிதவதியார்"

349. காள மேகப் புலவரின் இயற்பெயர் என்ன? "வரதன்"

350. பட்டினத்தாரின் இயற் பெயர் என்ன? "திருவெண்காடர்"

351. சுவாமி விபுலாந்தரின் இயற் பெயர் என்ன? "மயில்வாகனன்"

352. இராமாயணம் இயற்றிய கம்பரின் இயற்பெயர் என்ன? ஏகம்பன்

353. மறைமலையடிகளின் இயற்பெயர் சுவாமி வேதாசாலம்

354. பாரதியாரின் இயற் பெயர் சுப்பையா

355. பாரதிதாசனின் இயற் பெயர் கனக சுப்புரத்தினம்

356. வீரமாமுனிவரின் இயற் பெயர் கான்ஸ்டன்ண்டைன் ஜோசப் பெஸ்கி

357. போப்பையரின் இயற் பெயர் G.U போப்

358. புதுமைப் பித்தனின் இயற் பெயர் சொ. விருத்தாசலம்

359. சேக்கிழாரின் இயற் பெயர் "அருண் மொழித் தேவர்

360. ஸ்ரீ ஆண்டாளின் இயற் பெயர் என்ன? கோதை நாயகி

361. ராவணனின் மகன் இந்திர ஜித்தின் இயற்பெயர் மேகநாதன்

362. தேவவிரதன் என்பது பீஷ்மரின் இயற்பெயர்

363. வில்லிபுத்தூராரின் இயற் பெயர் என்ன? பெரியாழ்வார்

364. எழுத்தாளர் லஷ்மியின் இயற்பெயர் திரிபுரசுந்தரி

365. கல்கியின் இயற்பெயர் இரா. கிருஷ்ணமூர்த்தி



366. கவிஞர் கண்ணதாசனின் இயற் பெயர் முத்தையா

367. இந்திரா காந்தியின் இயற்பெயர் என்ன? இந்திரா பிரியதர்ஷினி

368. பின்னணிப் பாடகி எல்.ஆர் ஈஸ்வரியின் இயற்பெயர் என்ன? டி.எல். ராஜேஸ்வரி

369. இராஜாஜியின் இயற் பெயர் சி. இராஜ கோபாலச்சாரியார்

370. மௌனியின் இயற் பெயர் எஸ். மணி

371. கவிஞர் சுரதாவின் புனைப்பெயர் சுப்பு ரத்தின தாசன் என்பதன் சுருக்கம்.

372. யூகோஸ்லாவியா நாட்டு விமான நிறுவனத்தின் பெயர் ஜாட் ஏர்லையின்ஸ்

373. Tap என்பது எந்த நாட்டு விமான சேவை நிறுவனம்? திபெத்

374. அமெரிக்காவில் பிராட்டஸ்டன்ட் கிறிஸ்தவர்களே அதிகம்

375. குளுக்கோஸ் சத்து உடலில் இல்லை என்றால் மனிதனால் உயிர் வாழ முடியாது

376. காற்று என்பது நீரைவிட 800 மடங்கு லேசானது

377. மிகவும் குறைந்த எடையுள்ள வாயு எது தெரியுமா? நைட்ரஜன்

378. அமெரிக்காவில் முதல் ஜனாதிபதியான ஜார்ஜ் வாசிங்டன் மணம் செய்து கொண்டது ஒரு விதவைப் பெண்ணை

379. இளம் வயதில் அமைதிக்கான நோபல் பரிசைப் பெற்றவர் மார்ட்டின் லூதர்கிங், பரிசு பெறும் போது 35 வயது

380. வெப்பம், மின்சாரம் முதலியவற்றை கடத்தாத ஒரே பொருள் எது? மைக்கா

381. சீட்டாட்டத்தில் மிக முக்கிய ஆட்டமான பிரிட்ஜ் ஆட்டத்தை துருக்கி நாடுதான் கண்டு பிடித்தது

382. தாய்ப்பாலை விட பசும்பால் ஒரே ஒரு விஷயத்தில் மட்டும் சிறந்தது. பசும்பாலில் புரதம் அதிகம்

383. இங்கிலாந்தின் தலையாய பெண்மணி இங்கிலாந்து அரசிதான் ஆனால் கொமன்ஸ் சபைக்குள் நுழைய இவருக்கு அதிகாரம் இல்லை

384. அமெரிக்காவின் முதல் ஜனாதிபதி ஜார்ஜ் வாசிங்டன் இரண்டாவது ஜனாதிபதி யார்? ஜான் ஆடம்ஸ்

385. 2ம் உலகப்போரின் போது ஜப்பான் மீது அணுக்குண்டு வீச அனுமதியளித்த அமெரிக்க ஜனாதிபதி ட்ருமன்



386. சந்திரிகா குமாரணதுங்க ஜனாதிபதியாக பதவியேற்றது 12-11-1994 லில்

387. 13 வது பாராளுமன்ற பிரதமராக 6 ஏப்ரல் 2004ல் மகிந்த ராஜபக்ஷ பிரதமராக பதவி ஏற்றல்

388. பீமண் ஏர்லைன்ஸ் எந்த நாட்டை சேர்ந்தது? நேபாளம்

389. கையில் கரும்புடன் எப்போதும் காணப்பட்டு வந்த சித்தர் யார்? பட்டினத்தார்

390. அல்பா, பீட்டா இவை எந்த தேசத்தின் மொழியில் முதல் இரண்டு எழுத்துக்களாய் அமைந்தவை? கிரேக்கம்

391. மைக்கா ஏற்றுமதி செய்வதில் உலகிலேயே முன்னணியில் உள்ள நாடு இந்தியா

392. ஈரான் நாட்டு எல்லையை தொடுவது காஸ்பியன் கடல்

393. கரும்பு நன்கு முற்றி விளைய எடுத்துக் கொள்ளும் காலம் ஒரு வருடமாகும்.

394. சொந்தமாகத் தானே உணவு தயாரிக்காத செடி காளான்

395. இலங்கையின் சிறந்த வங்கியாக 6 தடவையாக 2004 ல் வருடமும் கொமர்ஷல் வங்கி (The Banker) சஞ்சிகையில் தெரிவு செய்யப்பட்டுள்ளது

396. இலங்கை தேசிய பட்டியல் மூலம் தெரிவு செய்யப்படும் பாராளுமன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கை என்ன? 29

397. அன்சா என்ற செய்தி நிறுவனம் எந்த நாடு? இத்தாலி

398. முகமது நபி மூன்று முறையும் விதவைப் பெண்களையே மணந்து கொண்டார்.



399. ஐ.நா. சபையில் வீட்டோ அதிகாரமுள்ள நாடுகள் எவை? சீனா அமெரிக்கா, ரஷியா, பிரான்ஸ், பிரிட்டன்

400. யூரோ நாணயத்தை ஏற்காத நாடுகள் எவை? பிரிட்டன், சுவீடன், டென்மார்க்.

401. 12வது சார்க் உச்சி மாநாடு 2004ல் ஜனவரியில் பாகிஸ்தான் இஸ்லாமா பாத்தில் நடைபெற்றது.

402. 1994ல் வியாழன் கோளுடன் மோதிய வான் வெள்ளி எது? சூமேக்கர் வான்வெள்ளி.

403. பூகம்பத்தை அளக்கப் பயன்படும் கருவி யாது? றிக்டர் அலகு

404. நிறம் மாறினாலும் அண்ணனின் குணம் மாறாது யார் அது? மிளகாய்

405. எலும்பில்லாதவன் சில நேரங்களில் எலும்புகளை உடைத்து விடுவான் அவன் யார்? நாக்கு

406. 2002ல் நேபாளத்தில் நடைபெற்ற சார்க் உச்சி மாநாடு எத்தனையாவது மாநாடு, 11 மாநாடு

407. இலங்கையில் 1991 இல் நடைபெற்ற சார்க் மாநாடு எத்தனையாவது? 6வது

408. முதலாவது சார்க் மாநாடு 1985 ஆம் ஆண்டில் எங்கே நடைபெற்றது? பூட்டான் திம்பு நகரில்

409. இலங்கைப் பாராளுமன்றத்தில் தொடர்ந்து 4 முறை தேசியப் பட்டியல் மூலம் பாராளுமன்ற உறுப்பினராக செய்யப்பட்டவர் யார்? அல்ஹாஜ் A.H.M அஸ்வர்

410. இலங்கையின் இப்பொழுதுள்ள பாராளுமன்றம் சம்பிரதாய பூர்வமாக திறக்கப்பட்டது 29-4-82ல்

411. சுதந்திர இலங்கையின் முதல் நிதி அமைச்சர் J.R ஜயவர்த்தன.

412. இலங்கையில் நிதி அமைச்சராகவும் இரு தடவை எதிர்க் கட்சித் தலைவராகவும் இருந்தவர் N.M. பெரேரா (1947-52) (1956-59)

413. 1947ல் இலங்கை முதலாவது பாராளுமன்றத் தேர்தலில் 356 பேர் வேட்பு மனு தாக்கல் செய்திருந்தனர். இத்தேர்தலில் முஸ்லிம்

வேட்பாளர் ஒருவர் போட்டியின்றி தெரிவு செய்யப்பட்டார் யார் அவர்? H.S இஸ்மாயில்

414. இலங்கையில் போயா தினங்களை அரசாங்கம் விடுமுறையாக்கியது 1966 முதல்

415. ஸ்ரீமாவோவின் குடியுரிமையைப் பறிப்பதற்கான சட்டம் J.R ஜெயர்வர்தனாவால் 29 ஆகஸ்ட் 1980 அன்று அமுல்படுத்தப்பட்டது.

416. (டொனமூர் வழங்கிய) அரசாங்க சபையில் 1936 - 1947 வரையில் சபாநாயகராக பதவி வகித்த ஒரேயொரு தமிழர் சேர். வைத்திலிங்கம் துரைசர்மி

417. ஐக்கிய தேசிய கட்சி, சிறிலங்கா சுதந்திரக்கட்சி ஆகிய இரு அரசாங்கத்திலும் நிதி மந்திரியாக நீண்டகாலம் பதவி வகித்தவர் றொனி டி மெல்.

418. இலங்கையில் இறுதியாக உருவாக்கப்பட்ட நிருவாக மாவட்டம் எது? கிளிநொச்சி

419. இலங்கையில் அரசாங்க வர்த்தமானி முதன் முதலில் எப்போது வெளிவந்தது? வாரந்தோறும் என்ன கிழமையில் வெளியிடப்படுகிறது? 15.3.1802 ல், வெள்ளிக்கிழமையில்

420. 5 ஆம் தர புலமைப் பரிசில் திட்டம் எத்தனையாம் ஆண்டில் அறிமுகப்படுத்தப்பட்டது? 1940ல்

421. இலங்கையில் 18 வயதுக்கு மேற்பட்டவர்கள் முதன் முதல் வாக்களித்தது 1965ம் ஆண்டுத் தேர்தலில்

422. நமது நாட்டில் இறுதியாக நகர சபையாக இருந்து மாநகரசபையாக தரம் உயர்த்தப்பட்ட மாநகர சபை எது? கல்முனை

423. இலங்கையில் மிகக் கூடிய நிலப்பரப்பில் நெல் பயிரிடப்படும் மாவட்டம் எது? குருநாகல்

424. நோபல் பரிசு 1940,41,42 ஆகிய மூன்று வருடங்களும் வழங்கப்படவில்லை

425. ரேடியம் தங்கத்தைவிட பல மடங்கு விலையுள்ளது

426. பாரதரத்னா விருதை வாங்க மறுத்த இந்திய ஜனாதிபதி பக்ருதின் அலி அகமத்

427. மூன்று முறை பிரதமராக தேர்ந்து எடுக்கப்பட்ட ஒரே ஐரோப்பிய பெண் பிரதமர் பிரிட்டிஷ் மாக்ரெட் தட்சர்

428. 1997, 2001, 2005, மூன்று பொதுத்தேர்தலிலும் வெற்றி பெற்று 3வது முறையும் பிரிட்டிஷ் பிரதமராக வந்திருப்பவர் டோனி பிளேயர்

429. உலகில் ஆறு மீட்டர் துணியை தலையில் அணிந்து கொள்வது எந்த நாட்டு மக்கள் வழக்கம்? ஆப்கானிஸ்தான்

430. நீரில் மிதக்கும் உலோகம் எது? அலுமினியம்

431. மொறிசியஸ் நாட்டு மக்களில் 65% வீத வம்சாவளியினர் எந்த நாட்டினர்? இந்திய வம்சாவளியினர்

432. இசையை வெறுத்த மொகலாய மன்னர் யார்? ஔரங்கசீப்

433. சீனாவில் பிறந்து அமெரிக்காவின் புகழ் பெற்ற டைம் பத்திரிகையை நிறுவியவர் யார்? ஹென்றி

434. சிட்டுக்குருவி என்றாலும் ஊர்க்குருவி என்றாலும் இரண்டும் ஒன்று தான் இது சரியா? தவறா? சரி

435. பிரான்சில் மாவீரன் நெப்போலியன் உருவாக்கிய செவாலிய விருதை 1995 ல் முதன் முதல் பெற்ற தமிழ் நடிகர் சிவாஜி கணேசன்

436. பிரான்சில் செவாலியா விருது 1995ல் சிவாஜிக்கு பின் 2005ல் பிரபல கர்நாடக சங்கீத வித்துவான் பாலமுரளி கிருஷ்ணாவுக்கு வழங்கப்பட்டது.

437. உலகில் ஆங்கிலத்துக்கு அடுத்து ஆட்சி மொழியாக இருப்பது பிரெஞ்சு மொழி

438. உலகில் 33 நாடுகளில் பிரெஞ்சு மொழி ஆட்சிமொழியாக உள்ளது

439. இலக்கியத்தில் 12 முறை நோபல் பரிசு பெற்ற நாடு பிரான்ஸ்

440. உலகில் உள்ள மொத்த எரிமலைகள் 535 ஆகும் இவற்றுள் கடலுக்குள் இருப்பது 80 எரிமலைகள்

441. உலகிலேயே மிகப்பெரிய தேசியக் கொடியை உடைய நாடு டென்மார்க்

442. உலகில் முதன் முதல் தேசிய கீதத்தை உருவாக்கிய நாடு ஜப்பான்

443. நோர்வே, சுவிடன், டென்மார்க் ஆகிய நாடுகளில் "ஏ" என்ற பெயரில் நகரங்கள் இருக்கின்றன

444. மனித உடலில் உள்ள மூட்டுக்கள் எத்தனை? 230

445. கல்குலேட்டரை கண்டு பிடித்த நாடு எது? சீனா

446. 20 ஜனவரி 2004ல் கைச்சாத்திடப்பட்ட J.V.P, சிறிலங்கா சுதந்திரக்கட்சி கூட்டு 2005 யூன் 15 நள்ளிரவுடன் முறிந்து விட்டது

447. 13வது சார்க் மாநாடு பங்களாதேஸ் தலைநகர் டக்காவில் நவம்பர் 12 2005 ல் நடைபெற உள்ளது.

448. 90 ரூபாய் (90 கியாத்) நோட்டு அச்சடிக்கும் ஒரே நாடு மியான்மர் 9 என்ற எண் புனிதமானது என்ற எண்ணமே இதற்கு காரணம்

449. உலகில் அதிகமாக நெல் விளையும் நாடு எது? தென் கொரியா

450. வானவில்லில் ஏழு நிறங்கள் உள்ளன என்பதைக் கண்டு பிடித்தவர் யார்? ஐஸாக் நியூட்டன்

451. எந்த நாட்டினர் மஞ்சள் நிறத்தை துரோகத்திற்கு அறிகுறியாக கருதுகின்றனர்? பிரான்ஸ்

452. 1997 ல் உலகத்தை உலுக்கிய மரணங்கள் எவை? மதர் தெரஸா, டயானா

453. புகையில் 19 வகையான விஷத் தன்மையுள்ளது

454. 100 ஐ குறிக்கும் ரோமானிய எழுத்து C

455. படிப்புச் செலவிற்காக வீட்டில் காளான்கள் வளர்க்கும் மாணவ மாணவிகள் அதிகம் உள்ள நாடு? அமெரிக்கா

456. பரப்பு, மக்கள் தொகை இரண்டிலும் பெரிய கண்டம் ஆசியா

457. இரண்டு மொழிகளில் தேசிய கீதம் உள்ள நாடு செக்கோசுலவாக்கியா



458. இரண்டு கண்டத்தில் உள்ள நாடு துருக்கி

459. இரண்டு பிரதமர்கள் உள்ள நாடு சான் மரினோ

460. இரண்டு தேசிய கீதம் உள்ள நாடு அவுஸ்திரேலியா

461. இரண்டு தேசியக் கொடிகள் உள்ள நாடு ஆப்கானிஸ்தான்

462. இரண்டு நட்சத்திரங்களை தேசியக் கொடியில் கொண்ட நாடு பனாமா

463. இரண்டு நாடுகள் இணைந்த நாடு தான் சானியா

464. இரண்டு தடவை சுதந்திரம் பெற்ற நாடு சைபிரஸ்

465. இரண்டு வேறுபட்ட தேசியக் கொடிகளைக் கொண்ட நாடு பனாமா

466. திருக்குறளில் ஒரே ஒரு பெயரில் இரண்டு அதிகாரங்கள் வருகிறது குறிப்பறிதல்

467. சூரியன் இரண்டு நாட்டு தேசியக் கொடிகளில் உண்டு ஒன்று ஜப்பான் மற்றது. ஆர்ஜென்டினா

468. ஒரே தேசிய கீதத்தை இரண்டு நாடுகள் கொண்டுள்ளன. கினியா, கேப்வொர்ட்.

469. வாத்தை தேசியப் பறவையாகக் கொண்ட இரண்டு நாடுகள் கனடா, ஹாவா

470. இரண்டு பிரதமர்களால் ஆளப்படும் நாடு கம்பூச்சியா

471. இரண்டு நாடுகளில் திருமணம் முடிந்த பின் விவாகரத்து வாங்க முடியாது அவை அயர்லாந்து, மோல்டா

472. இரண்டு தலை நகரங்கள் உள்ள நாடு சவூதி அரேபியா ஒன்று ரியாத் மற்றது ஜெட்டா

473. இரண்டு நாடுகளின் தேசிய கீதங்கள் இயற்றியவர் ரவீந்திர நாத் தா கூர் ஒன்று இந்தியா, மற்றது பங்களாதேஸ்

474. பறவையினங்களில் இரண்டு பறவைகள் கூடு கட்டிக் கொள்ளாது? குயில் மற்றது ஆந்தை

475. இரண்டு நாடுகளில் ரயில் போக்குவரத்து வசதி கிடையாது ஒன்று ஆப்கானிஸ்தான் மற்றது ஐஸ்லாந்து

